**ஏப்ரல் – 12**

**"நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்கு பெறுகிறபடியால், அநேகரான நாம் ஒரே அப்பமும், ஒரே சரீரமுமாயிருக்கிறோம்."**

**1கொரி 10 : 16,17.**

அநேகத் தானியங்களிலிருந்து வந்ததாயிருந்தாலும், ஒரே அப்பமாயிருக்கிறது போல, அநேகத் திராட்சைப் பழங்களின் ரசமாயிருந்தாலும் பாத்திரம் ஒன்றே. மற்றவர்களுக்கு அப்பமாக வேண்டுமானால், தானியங்கள் தங்களுடைய பிரத்தியோகத் தன்மையையும், தங்களுடைய சொந்த ஜீவனையும் பராமரிக்க முடியாது. திராட்சைப் பழங்களும் ஜீவனைக் கொடுக்கிற சக்தியாக அமைய வேண்டுமானால், தங்களைத் தனி திராட்சைப் பழங்களாகப் பராமரிக்க முடியாது. இவ்விதமாக தேவனுடைய ஜனங்கள் ஒரு அப்பதிலும், பாத்திரத்திலும் பங்கு கொள்ளுகிறவர்களாக இருக்கிறார்கள் என்று, அப்போஸ்தலன் சொன்னதின் அழகைப் பார்க்கிறோம். அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்தானத்தில் அவரோடு அடக்கம் பண்ணப்படவும், இவ்விதமாக அவரோடு உயிர்தெழுதலையும், மகிமையையும், கனத்தையும், சாவாமையையும் அடையத்தக்கதாகக் கர்த்தருடைய அழைப்பை ஏற்றுக் கொள்ளுவதல்லாமல், புது சுபாவத்தை அடைய வேறு ஒரு மார்க்கமில்லை. **- Z '01, 76 (R 2771).**

ஞாபக விருந்தில் திருஷ்டாந்தப்படுத்தப்படுகிற முதல் கருத்து, நீதிமான்களாக்கப்படுதலாக இருக்கும் பொழுது, அதன் இரண்டாவது கருத்து, பிரதிஷ்டையாக இருக்கிறது. இந்த நோக்காகப் பார்க்கும் போது, பாத்திரம் பலியாகிய செத்துக் கொண்டேயிருக்கும் முறைக்கு நேரிடுகிறதும், சகிப்பதற்கு நமக்காகத் தேவனால் ஊற்றப்படுகிறதுமான பாடுகளை திருஷ்டாந்தப்படுத்துகிறது. பலியாகக் கொடுக்கப்படுகின்ற சபையின் மனுஷீகத்தை அப்பம் குறிக்கிறது. இவ்விதமாக ஞாபக விருந்தில், சபையின் மரணமும், யேசுவின் மரணமும் வர்ணிக்கப்பட்டிருக்கின்றன. **-P '34, 46.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

யாத் 12:3-14,18,21-28; மத் 26:26-28; மாற் 14:22-25; 10:35-39; லூக் 12:50; யோவா 18:11; 1கொரி 11:23-24; லூக் 22:19,20; ரோம 6:1-11; 8:10,17; 12:1; 1கொரி 15:29-34; 2கொரி 1:5; 4:8; கலா 2:20; பிலி 3:10; கொலோ 1:24; 2தீமோ 2:10-12; 1பேது 2:19-24; 3:17,18; 4:13-19; கொலோ 1:27; 1கொரி 12:12,13; எபி 3:1; 7:26,27; 1பேது 2:5,9; எபி 10:4-10; 13:10-14; 9:13-23.

**கோபுர வாசிப்பு : Z '13, 327 (R 5341).**

**வினாக்கள் :** நான் இந்த வாரத்தில் யேசுவோடும், சகோதரர் படும் உபத்திரவங்களோடும் ஐக்கியப் பட்டிருந்தேனா? என்னென்ன வழிகளில்? என்னென்ன சந்தர்ப்பங்களில்? இவற்றில் உதவியாயிருந்தது அல்லது தடையாக இருந்தது எது? ஏற்பட்ட பலன்கள் என்ன?